# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி : 10 மலர் : 3 Plant : 10 Flower : 3 ஜனவரி 2025 / January 2025

ஆண்டு சந்தா ரூ.50/- Annual Subscription Rs.50/- தனிபிரதி விலை ரூ.5/- Price Rs.5/-





**2025-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்**

“கர்த்தர் மோசேயை நோக்கி : கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று “நீ” இப்பொழுது காண்பாய் என்றார்” – (எண். 11:23)

அவசர ஜெப உதவிக்கு மட்டும்

**94433 46119**

# ஆசிரியர் மனம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள் கூறி எழுதும் அன்பின் மடல். ஆண்டவரின் கிருபையால் நலம். அதுபோல் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் நலமுடன் இருப்பீர்கள் என கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கிறேன்.

***"Wish you a Very Happy New Year"*** – 2025

இந்த புதிய 2025-ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் எங்களது பத்திரிகையின் வாயிலாக உங்களைக் காண கிருபை புரிந்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்கள் உரித்தாவதாக. பத்திரிகை வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் எங்களது சார்பிலும், சபையின் சார்பிலும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டு முழுவதும் தேவ கிருபை உங்கள் யாவர்மீதும் இருக்க ஜெபித்துக் கொள்கிறோம். இந்த ஊழியத்திற்காக மறவாமல் தங்களது தனி ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே ! ஒரு முக்கியமான காரியத்தை இப்பகுதியில் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன். ஆண்டவருடைய வருகைக்கான காலம் இது என்று ஒவ்வொரு பிரசங்கியாரும் செய்தியின் வாயிலாக, பாடல்களின் வாயிலாக பல வருடங்களாக வெளிப்படுத்திக் கொண்டேதான் இருக்கிறார்கள். எனவே, அன்பானவர்களே ! இதுவரை ஏற்பட்ட காலதாமதம் இனியும் ஆகும் என்று நாம் எண்ணி ஏமாந்து விடக்கூடாது. 'இனியும் காலம் செல்லாது' (வெளி.10:6) இன்றைய நாட்களின் நிலவரங்கள், அறிவியலின் அசூர வளர்ச்சியை misuse பண்ணுவதால் நடக்கும் விளைவுகள், ஆபத்துக்கள் .... சொல்லி முடியாதளவுக்கு, பாவம், கற்பழிப்பு,கொள்ளை, கொலை மனிதாபிமானத்திற்கு கொஞ்சமும் இடமளிக்காத சூழ்நிலைகள் ... இவையெல்லாவற்றையும் T.V. செய்திகள், Newspaper போன்றவற்றில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இவையெல்லாம் கடைசி காலத்தின் அடையாளங்கள் என்பதில் ஐயமில்லை. இயேசுவின் வருகைக்காக காத்திருக்கிறவர்களாக, அவர் வருகையின் போது கைவிட்டு விடப்படாதபடிக்கு நற்கிரியைகளிலும், ஊழியங்களிலும் நம்மை நிலைநிறுத்தி தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம். இந்த புதிய ஆண்டிலே தேவனுடைய புதிய கிருபைகளை நாம் பெற்றுக் கொள்ள நம்மைத் தகுதிபடுத்திக் கொள்வோம். தேவகிருபையும், சமாதானமும் இந்த ஆண்டு முழுவதும் உங்களை பூரணமாய் வழி நடத்த எங்களின் ஜெபம் பத்திரிகை வாசகர்களாகிய தங்கள் யாவருக்கும் உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தருக்கு சித்தமானால், மீள இப்பகுதியில் உங்களை வருகிற மாதங்களில் சந்திக்கிறேன்.

இப்படிக்கு,

கிறிஸ்துவின் பணியில்

உங்களின் அன்பு சகோதரி,

Sarah Vimal

(சாரா விமல்)

# 2025-ம் ஆண்டின் வாக்குத்தத்த செய்தி

## "அதிசயத்தை காண்பேன்"

எனக்கருமையான சகோதர ! சகோதரிகளே ! விசுவாச பிள்ளைகளே ! ஊழியர்களே ! ஊழியக்காரிகளே ! பத்திரிகை வாசகர்களே !

உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே 2025-ஆண்டிற்கான புத்தாண்டு வாழ்த்துக்கள் உரிதாகுக !

***ஊழியரின் குடும்பத்தினராகிய நாங்கள் :***

***வாழ்த்துவது யாதெனில்***

இவ்வாண்டில் தேவவாக்கின்படி, கர்த்தர் தங்களை சகல நன்மைகளோடும், ஆரோக்கியத்தோடும் நடத்துவாராக. அவருடைய கரம் உங்களை தாங்குவதோடு, கரம் பிடித்து நடத்துவாராக ! ஆமென்.

**2025-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்**

"கர்த்தர் மோசேயை நோக்கி : கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று "நீ" இப்பொழுது காண்பாய் என்றார்" - (எண். 11:23)

## "தேவ செயலைக் காணும் ஆண்டு"

கடந்த ஆண்டின் வாக்குத்தத்தின்படி, சுக வாழ்வு துளிர் விட்டபோது சில எதிர்ப்பு, பொறாமை, வேண்டாத பேச்சு, நிந்தைகள் ஏற்பட்டிருந்தாலும் ஏசா 58:8ன்படி கர்த்தருடைய மகிமை உங்களை பின்னாலே காத்திருக்கலாம். இருப்பினும் இவ்வாண்டில் சில எதிர்பார்ப்புகள் இருக்கும். ஆம் சகோதரரே! சகோதரிகளே

மேற்படி வாக்குத்தத்தத்தில் கர்த்தருடைய "கை" குறுகிப் போய் விட்டதோ என்ற கேள்வி குறியோடு காணப்படுகிறது. ஆயினும் இஸ்ரவேலர் "அன்றே" அதாவது அப்பொழுதே காணும்படி செய்தார். ஆம் யோசித்து பார்க்க முடியாத, நடக்குமோ! வனாந்திரத்தில் இது எப்படி வந்தது? இது சாத்தியமா? அவர்கள் அறிவுக்கு அப்பாற்பட்டதை செய்தார்.

அதாவது காடைகளை பாளையத்திலும், பாளையத்தை சுற்றிலும் அந்த பக்கம் ஒரு நாள் பயணம், இந்த பக்கம் ஒரு நாள் பயணம் தரையின் மேல் இரண்டு முழ உயரம் விழுந்து கிடக்க செய்தார்"

அந்த தேவனுடைய கரம் நம்மை நடத்தப் போகிறது.

## கர்த்தருடைய அந்த கரம்

அந்த கரத்தின் மகத்துவத்தையும், கிரியைகளையும் யோசித்துப் பார்க்கிறேன்" (சங். 143:5) அடிமைகளாய் இருந்த இஸ்ரவேலர் ஏறக்குறைய 6 லட்சம் மக்களை வழிநடத்தி வந்த கரம் எப்படிப்பட்டது. நினைத்து பார்த்தாலே ஆச்சரியமும் மகத்துவமானாதாக இருந்திருக்கிறது. அந்த கரம் நம்மை இந்த வருடத்திலே நடத்தப் போகிறதே !

கரத்தின் மகத்துவம்

அந்த கரம் எகிப்திலிருந்து புறப்பட்டபோது எகிப்தியர் கண்டு வியக்கத்தக்கதான வல்லமையுள்ள ஓங்கிய புயத்தினாலே மீட்ட கரம். (உபா.5:15) "கர்த்தருடைய கரம் பலத்ததேன்று அறியும் படிக்கு சிவந்த சமூகத்தையும், யோர்தான் நதியையும் வற்றிப் போகப் பண்ணினார்" (யோசு. 4:23,24)

அவருடைய கரம் பராக்கிரமுள்ளது. (சங். 89:13) ஏற்ற காலத்தில் உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (I பேது. 5:6) ஆம். "அவருடைய கரத்தில் சத்துவமும் வல்லமையும் உண்டு. எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் அவருடைய கரத்தினாலே ஆகும்". (I நாளா. 29:12)

## எனக்கான கரம்

"என்னை பெலப்படுத்தும் கரமானது, என்னை அவருடைய வலது கரம் தாங்குகிறது". (சங். 18:35) அதுமட்டும் அல்ல" என் வாழ்க்கையின் காலங்கள் அவர்கையிலிருக்கிறது" (சங். 31:15) பாதுகாப்பு வேண்டி அபயமிடும்போது "என்னை அவர் கரத்தின் நிழலினால் என்னை மறைக்கிறார்" (ஏசா. 51:16) மேலும் அவர் தமது கையை திறக்க அவைகள் (கடலில் வாழும் திமிங்கலம் மட்டுமல்ல நாமும் கூட) நன்மையால் திருப்தியாகிறது (சங். 104:28) அது மாத்திரமல்ல, நடக்க ஓட, நிற்கதக்க பலத்தை தேவன் தருகிறார். ஆம். எலியாவின் மீது கர்த்தருடைய கரம் இருந்த படியால் ஆகாப் ராஜாவின் இரதத்திற்கு முன்பாக யெஸ்ரயேலுக்கு முன்பாக ஒடினாள் (I இரா. 18:46) ஊழியர்களை விசேஷமாக நடத்துகிறார். ஆம் "கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவர் கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும். (ஏசா. 66:14)

அதினால் துன்மார்க்கனை தேவன் எனக்காக மங்கடிக்கிறார். ஆம். எலிமா என்கிற மாய வித்தைகாரனை, பவுல் ஆவியினால் நிரம்பி கடிந்து கொண்ட போது கர்த்தருடைய கை மாயவித்தைக்காரன் மேல் வந்ததால் சிறிது காலம் சூரியனை காணாதபடி குருடனான். ஆம், கர்த்தருடைய ஊழியக்காருக்காக தேவகரம் சத்துரு மேல் வந்தது" (அப். 13:11) அது மாத்திரமல்ல சுகத்தை தரகூடிய காரியமாய் நிறைய எடுத்துக் காட்டலாம்.

ஆம். “இயேசு பேதுரு கரத்தை தொட்டமாத்திரத்தில் ஜீரம் அவளைவிட்டு நீங்கிற்று” ( மாற். 8:15) அவருடைய கரம் நமக்கு பெரிய காரியங்களை செய்யும் என்பதை விசுவாசித்து இவ்வாண்டின கடந்து போவோமாக. மேலும் அவர் வார்த்தை செயல்படும் விதத்தை காண்போமாக.

**நிறைவேற்றும் வார்த்தை**

இச்செய்தியை வாசிக்கும் அன்பர்களே ! அருமையான விசுவாசிகளே! இந்நாட்களில் தேவன் சொல்லும் வார்த்தைகள் வேதவசனமே. வசனத்தைக் கொண்டுதான் பேசுகிறார். “கட்டளையே விளக்கு வேதமே வெளிச்சம்” (நீதி 6:23). “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் திடமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” (சங். 119:105) வாழ்க்கையிலே மிகுந்த சமாதானத்தை வேதம் தந்தது. அவர்களுக்கு இடறலில்லை (சங். 119:165) ஆம். அவர் தமது வார்த்தையை அனுப்பி அழிவுக்கு விலக்கி குணமாக்கினார். (சங். 107:20)

அந்நாட்களில் தீர்க்கதரிசிகளை கொண்டு பேசின வார்த்தைகள் யாவும் நிறைவேறிற்று. என்பதை வேதம் சாட்சியாக கூறுகிறது. “அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பாமல்,அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்” (சங் 55:11)

**சாட்சிகள்**

தேவன் சொன்னதோ (அ) தேவ ஊழியர்களை கொண்டு பேசின தேவ வசனத்தை சார்ந்து சொன்ன வார்த்தைகளையோ முழுமையாக நம்பி நீங்கள் பயன்படுத்தினலோ அது உங்கள் வாயிலிருந்து விசுவாசத்தோடு பேசுவீர்களானால் நிச்சயமாக இவ்வருடத்தில் நிறைவேறும். நீங்கள் எதிர்பார்க்கும் முடிகளை தேவன் செய்வார்.

**சாட்சி I**

எலிசாவிடம் வந்த நாகமானுக்கு அவனை பாராமலேயே வேலைக்காரனை அனுப்பி “நீ போய் யோர்தான் நதியில் 7 தரம் ஸ்நானம் பண்ணு அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்ல சொன்னான். அவனோ கீழ்படியாமல் அவன் மீது கோபம் கொண்டு அவன் (எலிசா) வந்து கூட பார்க்கவில்லை, வேலைக்காரனை அனுப்புகிறான் என்று கோபம் கொண்டு தான் ஒரு படைத்தளபதி; என் நாடு, நதிகளைக் குறித்து பெருமை பேசி கஷ்டத்தோடு குஷ்டம் நீங்காமாலேயே போனான். தன் ஊழியக்காரன் பிரதியுத்திரமாக ஒரு பெரிய காரியத்தை சொல்லியிருந்தால் செய்திருப்பீர் அல்லவா! நதியில் இறங்கி

தேவமனுஷன் கூறின வார்த்தையின்படி யோர்தானில் 7 தரம் முழுகி ஸ்நானம் பெற்றிருக்கலாமே ! என்றவுடன் அதின்படி செய்து குஷ்டரோகம் நீங்கி சுகமானான்" (2 இரா5:8-14)

**சாட்சி II**

மேற்கூறியபடி இயேசுவிடம் நூற்றுக்கு அதிபதி தன்வேலைக்காரன் சுகமாக்கும்படி வந்தான். அவனோ நானும் என் வீடும் நீர் வருவதற்கு பாத்திரமல்ல, ஆனால் ஒரு வார்த்தை சொல்லும் என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று விசுவாசத்தோடு சொன்னான் இயேசுவும் அதிபதியை பார்த்து நீ போகலாம். நீ விசுவாசித்த படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான் (மத். 8:13) ஆம் சீரியாவின் தளபதி மற்றும் அதிபதிக்கு நடந்த சம்பவம். மேலும்... .

**சாட்சி III**

கப்பர் நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் மரண அவஸ்தையில் இருந்தபடியால் அவனை குணப்படுத்த இயசேுவை வேண்டிக் கொண்டான். பிள்ளை சாகும் முன்பு நீர் வந்து சுகப்படுத்த வேண்டும் என கோரினான். இயேசுவோ நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருப்பான் என்றார். போகும் வழியிலே அவனுடைய வேலைக்காரர் வந்து உன் மகன் பிழைத்துக் கொண்டான். குணமாகிவிட்டான் என்றான். அவனை பார்த்து ராஜாவின் மனுஷன் எப்போது குணமானான்? என்றான். நேற்று 7-ம் மணி நேரம் என்றபோது இயேசு சொன்ன நேரமும் சுகமான நேரமும் அதுவே என்று அறிந்து அவனும் அவன் வீட்டாரும் விசுவாசித்தார்கள். (யோவான் 4:46-53.) ஆம். அவர் வார்த்தையின்படி நடக்குமோ, நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்கிற வார்த்தையின்படி நடந்தது.

**சாலோமோனின் சாட்சி IV**

சாலமோனின் சாட்சி கூறுவதை இங்கு கவனிப்போம். அரண்மனையும், தேவாலயம் கட்டி முடித்தபோது அவன் கூறிய சாட்சி : "என் தகப்பனாகிய தாவீது என்றும் உம்முடைய தாசனுக்கு செய்த வாக்குத்தத்தை காத்தருளினீா். உம்முடைய வாக்கினால் சொன்னீா். இந்நாளில் இருக்கிறபடி உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினாா்" (I இரா 8:24)

மேலும் அவர்கூறிய "தம்முடைய தாசனாகிய மோசேவைக் கொண்டு சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை. (I இரா 8:56)

**சாட்சி V**

சவுலை ராஜாவாக்க சாமுவேல் தீர்க்கதரிசி அபிஷேகம்

பண்ணுவித்த போது சில அடையாளங்கள் நடைபெறும் என கூறி அனுப்பினார். 1) ராகேலின் கல்லறையண்டை 2 மனுஷர்களை சந்திப்பீர் (2வதாக) பெத்தேலுக்கு போகிற 3 மனுஷர்கள் உன்னை சந்திப்பார்கள் (3வதாக) இரண்டு அப்பங்கள் கொடுப்பார்கள் (4வதாக) பெலிஸ்தியரின் எல்லை அருகே போகும்போது தீர்க்கதரிசிகள் கூட்டத்திற்கு எதிர்படுவாய் (5வதாக) நீ அவர்களோடே சேர்ந்து தீர்க்கதரிசனம் சொல்லி வேறு மனுஷனாவாய். ஆம். அந்த அடையாளங்கள் யாவும் அன்றைய தின மே நேரிட்டது. (I சாமு 10:1-9)

ஆம் கர்த்தருடைய பிள்ளைகளே! "வானமும் பூமியும் ஒழிந்து போகும் என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது" (லூக் 21:33)

எனக்கருமையான விசுவாசிகளே ஊழியர்களே! மேற்படி செய்தியை வாசித்தீர்களே உங்களை தேவன் ஏற்றுக் கொண்டது உண்மையாயனால் நீங்கள் அவர் வார்த்தைகளை ஏற்று நம்பிக்கை உடையவர்களாய் அவரை விசுவாசிப்பீர்ளோனால் தேவன் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தார். இனி என்ன செய்யமாட்டார். அவரை விசுவாசிக்கிறவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை பெறுவான் (யோ. 3:16). இவ்வாண்டில் (2025) நீங்கள் நம்புகிற காரியத்தை அவர் வாய்க்கப் பண்ணுவார் (சங். 62:5) சங்கீதக்காரன் கூறுவது போல "எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" (சங். 138:8)

இவ்வாண்டின் வாக்குத்தத்தின்படி கர்த்தரின் "கை" குறுகிப் போகவில்லை. அவர் தம் பரிபூரணத்திலிருந்து வழங்குவார். அவர் வார்த்தையின்படி நடக்குமோ நடக்காதோ என்று சந்தேகிக்காமல் வேத வசனத்தை அவர் விளம்பின வேதம் என்பதை புரிந்துக் கொண்டு அந்த வார்த்தைகளை பயனுள்ளதாக மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். வாக்குத்ததத்தின்படி இன்று நீ காண்பாய் என்பது போல சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும். இனிதே இவ்வாண்டை கழிப்போமாக!

*Widh you a Happy New Year 2025*
*May our Lord bless you.*

**2025ல்**
**நடைமுறைபடுத்துங்கள்**

| | | |
|---|---|---|
| வெற்றி வந்தால் | **பணிவு** | அவசியம் |
| தோல்வி வந்தால் | **பொறுமை** | அவசியம் |
| எதிர்ப்பு வந்தால் | **துணிவு** | அவசியம் |
| எது வந்தாலும் | **நம்பிக்கை** | அவசியம் |

**PRAISE THE LORD**

**2024-ம் ஆண்டிற்கான தீர்க்க தரிசனம் எல்லாவற்றையும் எழுத இடம் போதாத சூழ்நிலையில் 100க்கு 92ரூ சதவீதம் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. அவைகளில் சிலவற்றை மட்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

## தமிழ்நாட்டைக் குறித்து . . .

**1. அக்காலங்களில் மும்மாரி பெய்தது போல இந்த ஆண்டு மும்மாரி பெய்வதோடு கடுங்காற்றும், சூறாவளியும்,கடல் கொந்தளிப்பும் காணப்படும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 03.05.2024 நாளன்று பக்கம் : 7, 07.05.2024 நாளன்று பக்கம் 7, 22.05.2024 நாளன்று பக்கம் : 11, 13.08.2024 நாளன்று பக்கம் : 10, 16.10.2024 நாளன்று பக்கம் : 13 ஆகிய தேதிகளில் வேலூர், தூத்துக்குடி, பொன்னை, நாகர்கோவில், ஊட்டி, பேராணம்பட்டு, கன்னியாகுமரி, சென்னை ஆகிய இடங்களில் மழை, கடுங்காற்று, சூறாவளி, கடல் கொந்தளிப்பு போன்ற சேதாரம் ஏற்பட்டதை* காணமுடிகிறது.

**2. கடல்நீர் உள்வாங்குவதால் பயம் உண்டாகும். மேலும் அடிக்கடி ஏற்பட வாய்ப்புண்டு.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 13.06.2024 நாளன்று பக்கம் : 10, 06.08.2024 நாளன்று பக்கம்-12, 30.8.2024 நாளன்று பக்கம்10, ஆகிய தேதிகளில்* திருச்செந்தூர், தஞ்சாவூர், நாகர்கோவில், ராமேஸ்வரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் கடல்நீர் உள்வாங்கியதை காணமுடிகிறது.

**3. குடிதண்ணீர் / நிலத்தடி நீர் மாசுபடுவதால் தோல், வயிறு மற்றும் நுரையீரல் சம்பந்தமான வியாதிகள் உண்டாகும். கவனம் தேவை. சீர்படுத்தலும் அவசியம்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 18.06.2024 நாளன்று பக்கம் : 10-ல், சென்னை, காஞ்சிபுரம், மாவட்டத்தில் அசுத்தமான குடிநீர் குடித்து, கடந்த 20 நாட்களில் 9 பேர் இறந்துள்ளதாகவும் மேலும் பலருக்கு ஒவ்வாமை, வாந்தி, வயிற்றுப் போக்கு ஏற்பட்டதை காணமுடிகிறது.*

☛ *தினமலர் பத்திரிகையில் 03.09.2024 நாளன்று பக்கம் : 1-ல் தமிழகத்தில் 8 மாதத்தில் 11,743 பேருக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் 4 பேர் இறந்துள்ளனர். ஒருநாள் பாதிப்பு 205 ஆகும்.*

**5. தற்கொலையின் ஆவி கூடுதலாக செயல்படும் மற்றும் திருமண பந்த முறிவு எண்ணிக்கை கூடுதலாக இருக்கும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 10.03.2024 நாளன்று பக்கம் : 13, 03.09.2024 நாளன்று பக்கம் : 11, ஆகிய தேதிகளில் சென்னை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் காதல் தோல்வியினாலும், ஆன்லைன் ரம்மியில் பணம் இழந்ததினாலும் தற்கொலை செய்து கொண்டனர். இதன் மூலம் தற்கொலையின் ஆவி கூடுதலாக செயல்பட்டதை காணமுடிகிறது.*

**7. நிலச்சரிவானது ஏற்படும் மூணாறு, நீலகிரி, கொடைக்கானல் காணப்படும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 04.08.2024 நாளன்று பக்கம் : 16, 01.10.2024 நாளன்று பக்கம் : 16, 01.10.2024 நாளன்று பக்கம் : 12, 23.10.2024 நாளன்று பக்கம் : 7 ஆகிய தேதிகளில் கேரள, வயநாடு, நீலகிரி, மூணாறு, திருப்பத்தூர், ஊட்டி போன்ற இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதை காணமுடிகிறது.*

**9. கல்லூரி மாணவர்கள் (அ) இளைஞர்கள் எலக்ட்ரானிக் மற்றும் Computer Software ரோபாட் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவார்கள்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 26.08.2024 நாளன்று பக்கம் 10-ல் வானில் ஏற்படும் மாற்றங்களை தெரிந்து கொள்ளும் விதமாக சிறிய அறிவிலான செயற்கை கோளை உருவாக்கி வேலூர், ராணிப்பேட்டை அரசு பள்ளி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.*

## உலகத்தைக் குறித்து . . .

**2. புவி வெப்பமாகுதல் சில ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமானது. இநத ஆண்டு கூடுதலாகும். அதின் நிமித்தம் பனி உருகுதல் மற்றும் சமுத்திர நீர் உயர்வைக் காணும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 20.05.24 நாளன்று பக்கம் : 11, 10.07.24 நாளன்று பக்கம் : 14, 13.10.24 நாளன்று பக்கம் : 14 ஆகிய தேதிகளில் தாய்லாந்து, தென் அமெரிக்காவில் உள்ள ஹீவாஸ்கரன், காஷான் மலைச் சிகரம், ஆப்ரிக்கா ஆகிய இடங்களில் பனி உருகுதல் மற்றும் சமுத்திர நீர் உயர்வைக் காணமுடிகிறது.*

**6. 2004ஆம் ஆண்டில் கூறியது போன்றுதான் கடலில் உள்ள எரிமலை குமுறாலும், பூமி அதிர்ச்சி ஏற்படுவதால் இந்தோனேஷியா மற்றும் அருகாமையில் உள்ள தீவுகளில் சேதாரம் ஏற்படும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

☛ *தினமலர் பத்திரிகையில் 12.03.2024 நாளன்று பக்கம் : 16, 19.04.2024 நாளன்று பக்கம் : 16, 10.08.24 நாளன்று பக்கம் : 14, 10.08.24 நாளன்று பக்கம் : 14, 18.09.24 நாளன்று பக்கம் : 14, ஆகிய தேதிகளில் ஜகார்தா, ஐஸ்லாந்து, இந்தோனேசியா, இத்தாலி, வியட்நாம், லிமா ஆகிய இடங்களில் மண் வரிவு, வெள்ளப்பெருக்கு, எரிமலை வெடிப்பு, சூறாவளி போன்ற சேதாரம் ஏற்பட்டதை காணமுடிகிறது.*

**9. வடகொரியாவில் செயல்பாடுகளை கண்காணிக்கும் வல்லரசு நாடுகளின் போர்க்கப்பல்கள் மற்றும் ஜப்பான் மற்றும் தென் கொரியா, தைவான் கடற்பகுதியில் நிறுத்தப்படுவதால்**

**போர் அச்சம் உண்டாகும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 23.06.2024 நாளன்று பக்கம் : 19ல், கொரியா தீபகற்ப பகுதியில் தொடர் ஏவுகணை மற்றும் அணு ஆய்த சோதனை மூலம் வடகொரியா பதற்றத்தை ஏற்படுத்துகிறது. இதினிமித்தம் வடகொரியாவை சமாளிக்க கூட்டுப்போர் பயிற்சியானது விரைவில் தொடங்கும் என தென்கொரியா பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

- *தினமலர் பத்திரிகையில் 19.09.2024 நாளன்று பக்கம் : 14ல், சீனா விமானம்தாங்கி போர்க்கப்பல் ஒன்று ஜப்பானின் கடல்பகுதியில் நுழைந்துள்ளது. ஜப்பான் கடற் கரையில் இருந்து 24 கடல் மைல் தொலைவில் உள்ளது. இந்த தகவலை ஜப்பான் ராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது அண்டை நாடுகளுக்கு இடையே பதட்டத்தை அதிகப்படுத்தும். சீன ராணுவ சூழ்ச்சிகளின் ஒரு பகுதியாக பார்க்கப்படுகிறது.*

**11.வேதத்தில் குறிப்பிட்ட வண்ணம் நோவா மற்றும் லோத்தின் காலத்தில் நடைபெற்றது போல (லூக்கா 17:26/29/39) அக்னியினாலும் ஜலத்தினாலும் சேதாரம் ஏற்படும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 13.04.2024 நாளன்று பக்கம் : 16, 03.06.2024 நாளன்று பக்கம் : 18, 14.06.2024 நாளன்று பக்கம் : 11, 07.07.2024 நாளன்று பக்கம் : 14, 28.08.2024 நாளன்று பக்கம் : 16 ஆகிய தேதிகளில் ரஷ்யா, பிரேசில், மிசோரம், குவைத், சீனா, சூடான் ஆகிய இடங்களில் அக்னியினாலும், ஜலத்தினாலும் சேதாரம் ஏற்பட்டதை காண முடிகிறது.*

**17. நில நடுக்கம் ஏற்படவுள்ள நாடுகள் கூடுதலாக இருக்கும். பிலிப்பைன்ஸ், ஜப்பான், அட்லாண்டா, வட அமெரிக்கா, பிரிட்டிஷ் தீவு, மெக்சிகோ.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 02.01.2024 நாளன்று பக்கம் : 1, 03.01.2024*

*நாளன்று பக்கம் : 18, 04.04.2024 நாளன்று பக்கம் : 16, 07.04.2024 நாளன்று பக்கம் : 18, 09.11.2024 நாளன்று பக்கம் : 14, ஆகிய தேதிகளில் டோக்கியோ, தைவான், நியுயார்க், அமெரிக்கா ஆகிய இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டதை காணமுடிகிறது.*

**23. வல்லரசு நாடுகளாகிய அமெரிக்கா, ரஷ்யாவில் பொருளாதார ரீதியில் சரிவைக் காணும் பல பிரச்னைகள் உண்டாகும். உள்நாட்டு கலவரம், போதை பொருட்கள், வன்முறைகள் இனக்கலவரங்கள் உண்டாகும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 17.03.2024 நாளன்று பக்கம் : 14, 12.05.2024 நாளன்று பக்கம் : 1, 05.08.2024 நாளன்று பக்கம் 15, 10.09.2024 நாளன்று பக்கம் 14, 02.10.2024 நாளன்று பக்கம் 6, ஆகிய தேதிகளில் ஹாங்காங், குரோகஸ், இஸ்ரேல், பிரின்ஸ், தாகா, மெக்சிகோ, மாஸ்கோ, அமரிக்கா, நியுயார்க் உள்ளிட்ட நாடுகளில் கலவரம், போதை பொருட்கள், வன்முறைகள், இனக்கலவரங்கள் போன்ற பல பிரச்னைகள் உண்டானதை காணமுடிகிறது.*

**28. வானத்தில் ஒரு தூதன் கலசத்தை பிடித்து அதை சாய்க்கிறான். வெண்மையான தண்ணீர் போன்ற திரவம் சமுத்திரத்தில் கொட்டப்பட்டது. கப்பல் முழுகிற காட்சி, மீன்கள் செத்து மிதக்கிற காட்சி, கொந்தளித்து அலைகள் எழும்புகிற காட்சி எனவே கடற் சேதாரம் ஏற்பட வாய்ப்புண்டு.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 13.04.2024 நாளன்று பக்கம் : 16-ல் மொசாம்பிக் நாட்டில் படகு கவிழ்ந்து 96 பேர் பலியாகி உள்ளதை காணமுடிகிறது. மேலும் கடலில் மீன்கள் செத்து மிதந்த காட்சிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு விசா இல்லாமல் வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இத்தாலி கடலோரத்தில் இருந்து 50 கீ.மீ. தொலைவில் அகதிகள் வந்த படகு கவிழ்ந்தது. இதில் 9 பேர் பலியானதை காண முடிகிறது.*

**இந்தியாவைக் குறித்து . . .**

**1. இந்தியாவின் வளர்ச்சி மற்றும் விஞ்ஞான ரீதியாக உலன நாடுகளின் கவனம் ஈர்க்கப்படுவதாக இருக்கும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 02.01.2024 நாளன்று பக்கம்: 1, 03.01.2024 நாளன்று பக்கம்: 2, 11.06.2024 நாளன்று பக்கம்: 1, 24.06.2024 நாளன்று பக்கம்: 3, 17.08.2024 நாளன்று பக்கம்: 14, மேற்குறிப்பிட்ட தேதிகளில் பெங்களூர், புதுடில்லி, கர்நாடகா, சென்னை, நெல்லை, ஸ்ரீஹரிகோட்டா ஆகிய இடங்களில் இந்தியாவின் வளர்ச்சி மற்றும் விஞ்ஞான ரீதியாக உலக நாடுகளில் கவனம் ஈர்க்கப்பட்டதை காண முடிகிறது.*

**4. சீனா, ரஷ்யாவுடன் இந்தியா வர்த்தக ரீதியாக மட்டுமல்லாமல் இராணுவம் மற்றும் ஆயுதவர்த்தக சம்பந்தமான ஒப்பந்தம் ஏற்படும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 09.07.2024 நாளன்று பக்கம்-12, 23.10.2024 நாளன்று பக்கம்: 3, 24.10.2024 நாளன்று பக்கம்: 1, மேற்குறிப்பிட்ட தேதிகளில் சீனா, ரஷ்யாவுடன் இந்தியா வர்த்தக ரீதியாக மட்டுமல்லாமல் இராணுவம் மற்றும் ஆயுதவர்த்தக சம்பந்தமான ஒப்பந்தம் ஏற்பட்டதை காமுடிகிறது.*

**5. மரண விகிதாச்சாரம் கூடுதலாக இருக்கும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 30.03.2024 நாளன்று பக்கம்: 10, 21.06.2024 நாளன்று பக்கம்: 13, 04.07.2024 நாளன்று பக்கம்: 15, 30.03.2024 நாளன்று பக்கம்: 10, 21.06.2024 நாளன்று பக்கம்: 13, 04.07.2024 நாளன்று பக்கம்: 15, 31.07.2024 நாளன்று பக்கம்: 1, 02.08.2024 நாளன்று பக்கம்: 11, 30.09.2024 நாளன்று பக்கம்: 8, 02.10.2024 நாளன்று பக்கம்: 15, மேற்குறிப்பிட்ட தேதிகளில் ஜம்மு காஷ்மீர், புதுடில்லி, உத்திரபிரதேசம், கேரளா, வயநாடு, திரிபுரா, நேபாளம், ஆப்ரிக்கா ஆகிய இடங்களில் கார் கவிழ்ந்தும், கடும் வெயிலினாலும், கூட்ட நெரிசலானாலும், நிலச்சரிவினாலும், மழையினாலும்,விபத்துக்களினாலும், பெட்ரோல் டேங்கர் வெடித்ததானாலும் மரண விகிதாச்சாரம் கூடுதலாக இருப்பதை காண*

*முடிகிறது.*

**7. பூமிவெப்பமாகுதல் ஏற்கனவே உண்டானபடியால் இவ்வாண்டில் சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் உண்டாகும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 29.03.2024 நாளன்று பக்கம்: 20, 09.04.2024 நாளன்று பக்கம்: 1, 01.05.2024 நாளன்று பக்கம்: 10, 04.06.2024 நாளன்று பக்கம்: 11, 18.06.2024 நாளன்று பக்கம்: 1, 13.08.2024 நாளன்று பக்கம்: 8, 02.09.2024 நாளன்று பக்கம்: 11, மேற்குறிப்பிட்ட தேதிகளில் சென்னை, திருப்பத்தூர், வேலூர், வடமாநிலம், கேரளா, ராஜஸ்தான், குஜராத், தெலுங்கானா ஆகிய இடங்களில் இவ்வாண்டு சீதோஷ்ண நிலைகளில் மாற்றங்கள் உண்டானதை காண முடிகிறது.*

**9. பணவர்த்தனை இல்லாத நாடாக மாற்றி (அதாவது) Digital Payment பயன்பாட்டுக்கு கட்டாயப்படுத்தும் காலமாகும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 14.10.2024 நாளன்று பக்கம்: 12ல் இந்தியாவில் போன்பே, ஜிபே, அமேசான் பே உட்பட பல்வேறு செயலிகள் வழியாக டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவது அதிகரித்து வருகிறதை காண முடிகிறது.*

**12. இமயமலை பகுதியில் பனி உருகுதல், நில நடுக்கம் மற்றும் நிலச்சரிவுகள் உண்டாகும். சிம்லா, நேபாள், திரிபுரா, பஞ்சாப், டெல்லி வரை நிலநடுக்கத்தை உணர முடியும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 02.03.2024 நாளன்று பக்கம்: 16, 24.05.2024 நாளன்று பக்கம்: 6, 16.06.2024 நாளன்று பக்கம்: 11, 22.07.2024 நாளன்று பக்கம்: 13, 11.09.2024 நாளன்று பக்கம்: 13, 01.10.2024 நாளன்று பக்கம்: 11, மேற்குறிப்பிட்ட தேதிகளில் மணிப்பூர், ராமநாதபுரம், ஊட்டி, கேரளா, நேபாள், பாகிஸ்தான், உத்தரகாண்ட், சென்னை, புதுடில்லி, மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் பனி உருகுதல், நிலநடுக்கம், மழை, நிலச்சரிவு, நில அதிர்வு போன்று சேதாரம் ஏற்பட்டதை காணமுடிகிறது.*

**13. வெளி 16:13, வெளி 18:3, 5ன்படி உலகத்தை குறித்து குறிப்பிட்ட வண்ணம் தண்டனையான இயற்கையின் சீற்றம் கூடுதலாக இருக்கும்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 10.05.2024 நாளன்று பக்கம்: 18, 29.06.2024 நாளன்று பக்கம் 12, 30.06.2024 நாளன்று பக்கம்: 16, 07.07.2024 நாளன்று பக்கம்: 1, 09.07.2024 நாளன்று பக்கம்: 12, 30.08.2024 நாளன்று பக்கம்: 13 ஆகிய தேதிகளில் பிரேசில், கர்நாடகா, ஊட்டி, அயோத்தி, புதுடில்லி, உத்தரகாண்ட்,மும்பை, குஜராத் ஆகிய இடங்களில் வெளி 16:13, வெளி 18:3, 5ன்படி உலகத்தை குறிப்பிட்ட வண்ணம் தண்டனையான இயற்கையின் சீற்றம் கூடுதலாக இருப்பதை காணமுடிகிறது.*

**16. உலகத்தை குறித்து கூறிய வ. எண். 29ன்படி வாகன உற்பத்தியின் தீவிரம் காட்டுவார்கள்.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனமானது நிறைவேற்றப்பட்டது.

- *தினமலர் பத்திரிகையில் 01.05.2024 நாளன்று பக்கம்: 10, 26.06.2024 நாளன்று பக்கம்: 16, 30.10.2024 நாளன்று பக்கம்: 17, மேற்குறிப்பிட்ட தேதிகளில் வாகன உற்பத்தியில் தீவிரம் காட்டுவார்கள் என்பதை அறிய முடிகிறது.*

## சபையைக் குறித்து . . .

**சபையைக் குறித்து கூறிய வெளிபாட்டின்படி சபைகள் சென்று கொண்டிருக்கிறது. ஆவிக்குரிய விசுவாசிகள் மற்றும் கிறிஸ்துவர்களாகிய நாம் அறிந்ததே. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. சபையைக் குறித்து கூறிய 8 காரியங்கள் யாவும் இதுவரை நடைபெறுவதை நாம் காணமுடிகிறது.**

**ஜனவரி 2025 மாதத்திற்கான வாக்குத்தத்தம்**

*"என் இரட்சிப்பும் என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது. பெலனான என் கன்மலையும், என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது"*

(சங். 62 : 7)

# 2025-ம் ஆண்டிற்கான தீர்க்கதரிசனம்

## தேவனுக்கே மகிமை

### தீர்க்கதரிசனத்தைக் குறித்து

தேவனுடைய பார்வையில் யாவரும் அவரால் உருவாக்கப்பட்ட மானிடர்கள், அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறபடி தேவன் ஒருவரே. நாம் எல்லாரும் அவருடைய பிள்ளைகள், உலகில் நடைபெற இருப்பதை அறிகிற தேவன், தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் (ஆமோஸ் 3:7) விழிப்புணர்வு அடையும்படியாகவும், பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க ஏதுவாக Rev. Dr. விக்டர் விமல் அவர்களால் தீர்க்கதரிசனம் கூறப்படுகிறது. ஜாதி, மதபேதம் என்ற பிரிவினைக்கு இடமில்லை. கலகத்திற்கோ இடம் இல்லாமல் தேவ பார்வையில் இருந்து கூறுகிறார். இது கடைசிக்காலம், வெளி 13:18 மற்றும் 17:9 என்கிற வசனத்தின்படி 'ஞானம் விளங்கும்'. "தீர்க்க தரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்." (நீதி 29:18)

பரிசுத்த வேதாகம் குறிப்பிடுவது போல தீர்க்க தரிசனமானது எச்சரிக்கை கொடுத்து மக்களை சீர்படுத்தவும், ராஜாக்களை ஏற்படுத்தவும், இறங்க செய்யவும், மத். 24-ம் அதிகாரத்தில் கூறியபடி கொள்ளை நோய், பூமி அதிர்ச்சி, இயற்கையின் சீற்றம், பஞ்சம், யுத்த செய்தி போன்றவற்றை வெளிப்படுத்தி, மக்களை தெய்வ பயத்துடன் நடத்த வேதத்தின்படி தீர்க்கதரிசனம் உரைப்பது சரியாகும்.

"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். - (எபே. 5:16)

இவ்வாண்டினை காண்போமாக.

முக்கிய குறிப்பு : இவ்வாண்டு Rev. Dr. விக்டர் விமல் கூறும் தீர்க்கதரிசனம் யாவும் வேதத்தை சார்ந்து கடைசிகால வெளிப்பாடாக தேவன் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு :** பத்திரிக்கையில் குறிப்பிடாத தீர்க்கதரிசனங்கள்; புதுவருட ஆராதனையில் தேவ வெளிப்பாடாக தெரிவிக்கப்படும்.

### உலகத்தைப் குறித்து . . . .

1. ஒரு விசை பூமியை அதிரப் பண்ணுவார் எபி 12:25,26 - என்றபடி கடல், மழை, பூமி அதிர்ச்சி போன்றவற்றால் பெரிய அளவு பூமியில் நடைபெற உள்ளது.
2. கனடா, ஐரோப்பா, ஜெர்மனி போன்ற நாடுகளில் வேலையில்லா சூழ்நிலைகளால் போராட்டங்கள் வெடிக்கும்.

3. உலகில் ஆங்காங்கு போராட்டங்கள் நடைபெறும்.

4. அநேக கள்ள தீர்க்கதரிசிகள் எழும்பி மக்களை வஞ்சிப்பார்கள்.

5. அலைகள் பொங்கி எழவும், பலத்த காற்றும், நெருப்பும் பூமி அதிர்ச்சியும் நிறைய இடங்களில் உண்டாகும்.

6. புதுவிதமான தொற்று பரம்பி கண், சுவாச கோளாறு மற்றும் தசை பிடிப்பு, தளரும் வியாதி (Muscle Weakness).

7. தென்அமெரிக்கா, பிரேசில் நாடு நிலநடுக்கம் மற்றும் நீரினால் சேதாரம் உண்டாகும்..

8. தற்போதைய நிலையாகிய இஸ்ரேல் - பாலஸ்தீன, யுக்ரைன், ரஷ்யா போர் தொடர்ந்து இருக்கும்.

9. இங்கிலாந்து நாட்டில் உள்நாட்டு கலவரங்கள் ஏற்படும்.

10. டென்மார்க்கு பகுதியானது இயற்கை சீற்றலினால் (பனிபொழிவு) சேதாரம் இருக்கும்.

11. ஈரான் நாட்டில் சில பகுதிகள் அழிக்கப்படும். யுத்தத்திற்கு ஆயத்தப்பட ரஷ்யாவின் தூண்டுதல் இருக்கும்.

12. செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தி ரோபார்ட் மற்றும் போன்ற மனிதர்களை உருவாக்கி யுத்தத்திற்கும், கலவரத்தை அடக்கவும் செயல்படுத்த முனைவார்கள்.

13. சிரியா - இஸ்ரவேலிடம் யுத்தம் பண்ண ஈரான், ரஷ்யா தூண்டுவதால், சிரியாவிற்கு சேதாரம் உண்டாகும்.

14. சீனாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு மஞ்சள் நதியில் பெருக்கெடுத்து ஓடியது போல இந்த ஆண்டிலே உண்டாகி சேதாரத்தை விளைவிக்கும்.

15. அமெரிக்காவின் பொருளாதார உயர்வுக்கான நடவடிக்கை எடுத்து உயர்வை காணும்.

16. இலங்கையின் வடக்கில் சிலபகுதியில் இயற்கையின் சீற்றத்தால் சேதார நிலை உண்டாகும்.

17. இலங்கையின் பொருளாதார சீர்குலைவுக்கு பிறகு இவ்வாண்டில் சீர்படுத்த அண்டை நாடுகளிடம் சுமூக உறவு கொண்டு சீர்படும்.

18. இலங்கையில் தமிழ்மக்களிடம் ஓர் சுமூக உறவு காணப்பட்டு இவ்வாண்டு கடந்தாலும் இவ்வாண்டின் இறுதியல் பாகுப்பாடு உண்டாகும்.

19. வர்த்தக ரீதியாக ஒப்பந்தம் சீனாவுடன் செய்தது போல அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனும் உண்டாகும்.

20. இந்தோனேஷியாவை, 2002 மற்றும் 2003ல் கூறியபடி தொடர்ந்து கடலுக்கு அடியில் எரிமலை புகைந்து கொண்டிருப்பதை காண்பித்தார். இந்த ஆண்டு கடைசியில் மறுபடியும் நீர் சேதாரம் உண்டாகும். அதினால் சுமத்திரா, ஜாவா போன்று சில தீவுகள் சேதாரப்படும்.

21. போப் ஆண்டவர் மூலமாக ஆராதனை வழிப்பாடுகள் மற்றும் வேதத்தின் திருத்தம், முறைமைகள் என மாற்றம் ஏற்படும்.

22. வடகொரியா, தென் கொரியா இடையே உடன்பாடுகள் ஏற்படினும், போர்பதட்டம் காணப்படும்.

23. பாகிஸ்தான் மற்றும் சீனாவின் அத்துமீறல்கள் இந்தியா மீது இருக்கும்.

24. ஆஸ்திரேலியாவின் அரசியல் மாற்றங்கள், Canada-வில் சமீபத்தில் ஏற்பட்டது போன்று ஆஸ்திரேலியாவிலும் காணப்படும்.

25. 2025யினை குறித்து தேவநடத்துதலை கேட்டோம். ஆனால் 2026-ம் ஆண்டின் துவக்கத்திலிருந்தே அந்தி கிறிஸ்துவின் செயல்பாடுகள் தொடர்ந்து காணப்படும்.

26. பொதுவாக தேவனுடைய வருகைக்கு அடையாளமாக மத. 24ல் குறிப்பிட்டவண்ணம் செய்திகளை கேட்பதோடு, நீர், தீ, பூமி அதிர்ச்சி, சூறாவளி போன்ற இயற்கை ஆயுதங்களை தேவன் பயன்படுத்துவான்.

## இந்திய நாட்டைக் குறித்து . . .

1. பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தை காணும் வகையில், அந்நிய செலவாணி மற்றும் முதலீடு பங்கு சந்தைகளில் முன்னேற்றம் காணப்படும்.

2. சத்தியம் வீதியில் இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற் போகிறது'' (ஏசா. 59:14) போன்றுதான் நாட்டின் நிலைப் போகும்.

3. உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது.அதிலிருக்கிற நியாதிபதிகளின் முகத்தை மூடிப் போடுகிறார். (யோபு. 9:24)னுபடிதான் நடக்கும். இது கடைசி காலம்.

4. ஆங்காங்கு கலவரங்களும் போராட்டங்களும் நடைபெறும்.

5. விபத்துகளின் எண்ணிக்கை கூடுதலாகும்.

6. புதுவிதமான வியாதியாக சரீரத்தில் உள்ள உள் அவயங்களின் வளர்ச்சி, இருக்க வேண்டிய அளவை விட கூடுதலாகும். (abnormal)

7. இந்த ஆண்டில் உண்டாகும் பனிப்பொழிவு கடுமையாகவும் உயிர் சேதாரமும் வட இந்தியாவில் காணப்படும்.

8. விண்வெளி ஆராய்ச்சியில் சில சாதனைகளை நம்நாட்டு விஞ்ஞானிகள் செய்வார்கள்.
9. விசவாயு கசிவு ஏற்படுவதால் சில சேதாரம் உண்டாகும்.
10. தட்பவெப்ப நிலைகளை கணிக்க இயலாது. எல்லாம் கூடுதலாக இருக்கும்.
11. இந்திய நாட்டின் பொருளாதாரம் ஓரளவு உயர்வை கண்டடையும்.
12. மத்திய அரசியல் நிர்வாகத்தில் தடுமாற்றம் வரும். அடுத்து வேறு ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கும் பணிக்கு வாய்ப்புண்டு.
13. எல்லை பகுதியில் போர்பதட்டம் உண்டாகும்.
14. குஜராத்தில் அமைதி குலையும். தீவிரவாத சக்திகள் நுழையும்.
15. இமயமலை பகுதிகளை ஒட்டிய பகுதிகளாகிய இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், உத்திரபிரதேஷ் போன்ற பகுதிகளில் நில அதிர்ச்சியும், நிலச்சரிவு ஏற்படுவதையும் காணலாம்.
16. இராணுவ தளவாடங்கள், படைகளை பலப்படுத்த ஆட்சேர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
17. அதிநவீன ஆயுதங்கள் சம்பந்தமான கண்டுபிடிப்புகள், ராடார் போன்ற கருவிகள், ஏவுகணை, Satellite நிறுவித்தல்.


## தமிழ்நாட்டைக் குறித்து...

1. இவ்வாண்டு தமிழ்நாட்டின் நிர்வாகத் தன்மையை குறித்து அண்டை மாநிலங்களால் போற்றப்படும்.
2. மருத்துவ துறையில் சாதனைகளை படைக்கும் விதமாக அமையும். சித்த வைத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
3. நெசவு தொழிலாளர்களின் போராட்டத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் ஒரு முடிவு உண்டாகும்.
4. பூமியிலிருந்து அரியதொரு பொக்கிஷங்களை கண்டெடுப்பார்கள்.
5. கடற்கரை பகுதிகளில் கடற்நீர் பூமிக்கடியில் நுழைந்தது நிமித்தம் நிலச்சரிவு (அ) கடற்சேதாரம் ஏற்படும்.
6. மலைப்பகுதியில் வெடிப்புகளும், நிலச்சரிவுகளும் ஆங்காங்கு காணப்படும்.
7. சேலம், தர்மபுரி பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புண்டு.
8. தொழிற்சாலைகள் மற்றும் அந்நிய நாட்டு முதலீடுகள் பெற்று தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் அரசாக காணப்படும்.

9. கல்வித்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறப்பான முறையில் (முதலிடம் வகிக்க) செயல்படும்.
10. விவசாயத்தில் ஒருபக்கம் சேதாரமும், நஷ்டமும், மற்றொரு பக்கத்தில் பசுமையும் இலாபமும் உண்டாகும்.
11. அந்நியசக்தியின் ஊடுருவல் (தீவிரவாதம்) இருக்கும் கவனம் தேவை.
12. களங்கம் விளைவிக்கும் வகையில் போதை பொருட்கள் தமிழ்நாட்டில் நுழையும். தடுத்தாட் கொள்ள வேண்டும்.
13. விபத்தினாலும், கள்ள சாரயத்தினாலும் புதியதொற்று வியாதியானாலும் மரணத்தின் விகிதாசாரம் அதிகமாகும்.
14. Online சூதாட்டம், முதலீடு செய்தல், விளையாட்டு போன்றவைகளினால் மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் வாழ்க்கை பாதிக்கப்படும்.
15. கடைசிகாலமான படியால், வேதத்தின்படி அநேகர் சாத்தானால் மோசம் போவார்கள். அதினால் மன அழுத்தம் மற்றும் தற்கொலைகளின் விகிதம் அதிகமாகும்.

## சபையைக் குறித்து . . .

1. அந்திக்கிறிஸ்துவுக்கு வரவேற்பது அளிப்பது போன்று மேடைகள் போடப்படும் காலம்.
2. II தீமோத் 3:5-ன் படி தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதில் பலனை மறுதலிப்பார்கள்.
3. எல்லா மதமும் அன்பும், ஒழுங்கையும் கற்றுக் கொடுக்கிறது என்று அந்நிய அக்னியை நாதாபும் அபியவும் (எண். 3:4) கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்தது போல தேவசபையிலும் நுழையும்.
4. II தீமோத் 4:1-ன் படி சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்.
5. அநேகர் எழும்பி தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் (எரே. 29:9) நான் அவர்களை அனுப்பினதில்லை.
6. மத். 24:24ன்படி கூடுமானால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்.
7. ஆவிக்குரிய சபைகளில் விசுவாசிகளிடையேயும், கணவன் மனைவியிடமே பிரிவு காணப்பட்டு பக்தியோடு இருப்பதாக காணப்படும்.




## ஊழியர் சொன்ன நேரம்

என் பெயர் இம்மானுவேல். என் மனைவி பெயர் சோபனா. நாங்கள் திருச்சியில் இருந்து வருகிறாம். எங்களுடைய மகன் எதிர்பாராதவிதமாக Sick ஆகி திடீரென Unconscious ஆகி துவண்டு போய், கண்களின் கருவிழி மேலே மறைந்து பேச்சு மூச்சு இல்லாமல் காணப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு போகும் வழியிலே பாஸ்டரிடம் ஜெபிக்க கூறி என் தகப்பனாரிடம் கூறினேன். அவரும் பாஸ்டரிடம் நிலையை கூறி ஜெபித்தபோது அவர் கூறிய வார்த்தை ஒன்றும் பயப்படவேண்டாம். இந்நேரம் அவன் கண்கள் திறந்து எழுந்திருப்பான் என்றராம். ஆம். மருத்துவமனையில் குழந்தையை மருத்துவருக்கு முன்பாக table-ல் கிடத்தி காப்பாற்றுங்கள் என்று கதறினோம். மறுமுனையில் பிள்ளை எழுந்து உட்கார்ந்து அழுத காட்சி புல்லரித்தது. பிறகு என் தகப்பனாருக்கு போன் செய்து விவரத்தை தெரியப்படுத்தினேன். மேலும் பாஸ்டர் ஜெபித்து கூறிய நேரமும் பிள்ளை துடித்து எழுந்த நேரமும் ஒன்றாய் இருந்தது. ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்துகிறேன். எங்கள் விசுவாசத்தை வர்த்திக்க பண்ணின தேவனுக்கும் பாஸ்டருக்கும் நன்றி என் வாழ்க்கையின் ஒவ்வொரு stepலும் பாஸ்டரை அணுகி தேவசித்தத்தை அறிந்து சாட்சியோடு வாழ தேவன் கிருபை பாராட்டுகிறார். தேவனுக்கே மகிமை. பாஸ்டருக்கு நன்றி.

**இம்மானுவேல்,** திருச்சி

## தேவன் தந்த ஆவி என் நாசியில்

என் பெயர் சுந்தரராஜ், எனக்கு மூச்சு விடுவதில் திணறல் /சிரமம் என்பதை நான் அறியவில்லை. மருத்துவர்கள் அறிந்து என்னிடம் கூறினார்கள். தூங்குகிற வேளையில் 45 sec to 1 minute நின்று இதயமும், மூளையும் செயல்படுவதாக கூறினார்கள். போதுமான Oxyzen மூளைக்கும், இருதயத்திற்கும் செல்லவில்லை என்றார்கள். சமீபத்தில் ஞாபக மறதி ஏற்படுகிறது. தூங்கும்போது 81% இருக்கிறது. பொதுவாக 93% மேலே இருக்க வேண்டும் என்றார்கள். Bangalore -ல் இருந்து பாஸ்டரிடம் கூறி ஜெபித்தபோது operation இருக்காது பயப்பட

வேண்டாம் என்று கூறினார். அதுபோன்று Age factor -யினால் operation பண்ண முடியாது. அதற்கு பதிலாக oxygen Machine வைத்து Breath பண்ணினால் சிறிய Block இருந்தாலும் சரியாகி விடும் என்றார்கள். 5-க்கு கீழே இருக்க வேண்டும். ஆனால் 66% இருந்தது. தற்போது அந்த மெஷின் பயன்படுத்திய பிறகு 5% கீழே 2.3% வந்துள்ளது. மனம் உடைந்த வேளையில் பாஸ்டர் அவர்கள் தேவசித்தத்தை வெளிப்படுத்தி என்னையும், குடும்பத்தையும், பெலப்படுத்தி ஜெபித்து எங்களை ஊக்குவித்தார். தற்போது நான் ஆரோக்கியத்தோடு உள்ளேன். தேவன் மகிமைப்படுவாராக! ஜெபித்த பாஸ்டருக்கு நன்றி.

**Bro. Sundararaj** - Ra- ipet.

## சொன்னதை செய்பவர்

என் பெயர் ஹரி எர்னஸ்ட், என் மனைவிக்கு கர்ப்பபையில் கட்டியிருப்பதாக மருத்துவர் கூறினபடியான மனபாரத்துடன் பாஸ்டரிடம் கூறி ஜெபித்துவிட்டு விசுவாசத்துடன் இருந்து விட்டோம். இங்கு சபையில் பாஸ்டரை கொண்டு சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும் நிறைவேறுவதை கண்ணாரக்கண்டு விசுவாசித்து நடக்கும்போது Checkup போகும்போது operation செய்ய வேண்டும் என்றார்கள். பாஸ்டரிடம் அணுகியபோது ஜெப எண்ணெய்யை ஜெபித்து கொடுத்து பயன்படுத்த கூறினார். கட்டி மறைந்து போகும் தேவன் அற்புதம் செய்வார் என்று கூறினார். அதுபோன்று வயிற்று பகுதியில் தடவியும், தண்ணீரில் ஒரிரு சொட்டு ஊற்றி ஜெபத்துடனும், விசுவாசத்துடனும் அருந்தி வந்தோம். 2 மாதம் கழித்து மருத்துவரை அணுகிய போது, கட்டி மறைந்தது. அது இருந்த இடம் தெரியாமல் போனது. தேவனுக்கே மகிமை. தேவ உத்திரவு பெற்று தேவ வார்த்தையை கூறி ஆறுதல் படுத்திய பாஸ்டருக்கு நன்றி.

**Bro. Hari Earnest** - Vellore

என் பெயர் Hemalatha. சித்தூரிலிருந்து சாட்சி கொடுக்க வந்துள்ளேன். எங்கள் பாட்டி அறிமுகப்படுத்தி என் தாயார் பிள்ளைகளாகிய நாங்கள் பாஸ்டரிடம் அணுகி விடுதலையும் ஆசீர்வாதத்தையும் ஏராளமாய் பெற்றுள்ளோம். அதில் நாங்கள் கண்ட அற்புதத்தை கூறி தேவனை மகிமைப்படுத்துகிறேன். முதலாவது எங்களுக்கு விரோதமாக மந்திர கட்டுகளில் இருந்து விடுபட்டோம். எத்தனையோ வைத்தியர்கள், பூசாரிகள், ஜோசியர்களை அணுகியும் விடுதலை பெறாத நிலையில் இந்த சபையில் காலடி எடுத்து வைத்த நாள் முதல் சகல வியாதி, பிரச்னையிலிருந்து விடுதலை துவங்கியது. இரண்டாவதாக என் கர்ப்பப்பையில் கடடிகள் இருந்தது. operation செய்ய

வேண்டும் என்றார்கள். பாஸ்டரிடம் கூறியபோது ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெய்யை பயன்படுத்திவிட்டு ஒரு மாதம் கழித்து 2nd Opinion-யை doctor-யிடம் கேளுங்கள் என்றார். பயப்பட வேண்டாம். operation தேவைப்படாது. கட்டி இருக்காது என்றார். கர்த்தர் ஊழியரைக் கொண்டு பேசியபடி தேவன் அற்புதத்தை செய்தார். கட்டி மறைந்து விட்டது. நான் சுகமானேன். தேவனுக்கே மகிமை ! ஜெபித்து வெளிப்படுத்தின ஊழியருக்கு நன்றி.

**Sis. Hemalatha** - Chittoor.

## பரிதவிப்பை மாற்றுவார்

என் பெயர் கோமதி. என் தங்கைக்கு குழந்தை பிறந்தபோது, குழந்தையின் முகம் கழுத்து வீங்கியிருந்தபோது, தாயிடம் கொடுக்காமல், வேறு பிரித்து மருத்துவம் செய்யப்பட்டது. மருத்துவர் கூறிய காரியங்களை நினைத்து பயந்தோம். பாஸ்டரிடம் கூறிய போது குழந்தை குணமாகி discharge செய்வார்கள். குழந்தை வளர வளர வீக்கம் குறைந்து normal ஆகும் என்றார். கர்த்தர் சுகத்தை கொடுத்து சாட்சியாய் நிறுத்தியதற்கு நன்றி. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**கோமதி** - மேல்வல்லம்.

## கைவிடாதவர்

என் பெயர் ஆலிஸ் அகஸ்டியன். எனக்கு Urinary Track Infection (UTI) Problem இருந்தபடியால் மருத்துவமனைக்கு சென்று Treatment எடுத்தேன். இருப்பினும் தொடர்ந்து தூக்கமில்லை. திடீரென்று மூச்சு திணறல் உண்டாகி மருத்துவமனைக்கு சென்றபோது என்னை Admit செய்தார்கள். அடிக்கடி மூச்சு இயலாத நிலை ஏற்பட்டு icuல் சேர்க்கப்பட்டது. Kidney Problem இருக்கிறது என்று கூற, என் கணவர் பாஸ்டர் ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெய் கொண்டு தேய்த்தும், உட்கொண்டும், விசுவாச அறிக்கை செய்தேன். 50 ml, 100 ml தண்ணீர் குடிக்க கூறினார்கள். மிகுந்த வேதனை அடைந்தேன். பாஸ்டர் ஜெபித்து கூறியபடி Normal ஆகி வீடு திரும்பினேன். சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். பாஸ்டருக்கு நன்றி.

**Mrs. Alice Augustine** - Vellore.

## பொருத்தனைக்கு பதில் தந்தவர்

என் பெயர் ஸ்டெல்லா. கால்வலி, இடுப்பு வலி, பாதங்களுக்கு கீழ் எரிச்சல், சபைக்கு வந்தால் விடுதலை, வீடு சென்ற பிறகு வலி தாங்க முடியாமல் படுத்து விடுவேன். கால் வீக்கமும் உண்டு. பாஸ்டரிடம் கூறி

ஜெபித்து ஜெப எண்ணெய்யை பயன்படுத்தி வந்தேன். கர்த்தரிடம் பொருத்தனை செய்து, சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்துவதாக கூறினேன். பாஸ்டரும் எனக்காக ஜெபித்தார். தேவ வார்த்தையின் படி நான் சுகமாகி இன்று சாட்சி கூறினேன். தேவனுக்கு மகிமை. பாஸ்டருக்கு நன்றி.

**Mrs. Stella** - Katpadi.




## CGA Church Service and Live Streaming Schedules are given below in Indian Timings - IST

Every Day Tamil Msg-Live Streaming - 7 am to 8 am & 7 pm to 8 pm

SUNDAY SERVICE (TAMIL) : Every Sunday - 9am to 11.30 am

BIBLE STUDY : Every Wednesday - 7.30 pm to 8.30 pm

FASTING & DIVINE HEALING MEETING :

2nd Saturday of the Month - 10.00 am to 2.30 pm

TARRYING MEETING :

4th Saturday of the Month - 7.30 pm to 8.30 pm

MORNING DEVOTION :

1st Day of the Month - 5.00 am to 6.00 am

## ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am - 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am - 11.30 am |
| பிரதி செவ்வாய் | 7.00 pm - 8.00 pm ஊழியருடன் 1 மணி நேரம் ஜெபம் |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm - 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am - 12.00 -00- |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am - 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm - 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm - 8.30 pm |

# செய்திச் சிதறல்கள்

1. மாநில நெடுஞ்சாலை ஆணையம் கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல்.
2. சென்னை செஸ் உலகின் சிறந்த நகர் - குகேஷ் பெருமிதம்.
3. முதல்வரின் செயலர் அனுஜார்ஜ் 136 நாள் லீவு பிறகு செயலர்களுக்கு கூடுதல் பொறுப்பு.
4. பிணையில்லா விவசாய கடன் உச்சவரம்பு ஜன1ல் உயர்வு.
5. இந்திய அணியில் 3 வீரர்கள் விடுவிப்பு.
6. அணைக்கட்டு தாலுக்கா ஆபீசில் தாசில்தார் கூடுதல் பொறுப்பேற்பு.
7. மின்வாரிய அதிகாரி குடும்பத்துக்கு ரூ1.05 லட்சம் இழப்பீடு தொகை.
8. மேற்கு வங்க ஜூனியர் டாக்டர்கள் மீண்டும் போராட்டம் அறிவிப்பு.
9. பள்ளி விளையாட்டு விழாவில் சோகம் - ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்ற பெண் பலி.
10. 15 மாதத்தில் நக்சல்கள் அடியோடு ஒழிப்பு அமித்ஷா உறுதி.
11. பிரபல தபேலா இசைக்கலைஞர் ஜாகிர் உசேன் மரணம்.
12. தென் மாவட்டங்களில் கொட்டுது மழை. அதிகாரிகளுடன் முதல்வர் ஆலோசனை.
13. தமிழகத்தில் பலூன் திருவிழா 9 நாடுகள் பங்கேற்பு.
14. ஓர் ஆண்டில் 2.3 கோடி யூனிட் மின் உற்பத்தி. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை சாதனை.
15. பொங்கல் வேட்டி சேலை ஜனவரி 10க்குள் கிடைக்கும். அமைச்சர் காந்தி உறுதி.
16. தூத்துக்குடியில் மோசமான வானிலை. சென்னைக்கு திரும்பிய விமானங்கள்.

**அவசர ஜெப உதவிக்கு**

*"ஜெபக்குறிப்புகளை, கடிதங்களை அனுப்ப மற்றுமொரு வாய்ப்பு"*

**E-Mail** pastorvictorvimalcga@gmail.com



CGA-சபையின் சார்பில்

விசுவாச மக்களுக்கும், பத்திரிகை வாசகர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக...
இப்புத்தாண்டில் சகல நன்மைகளும் ஈவுகளும் பெற்று நல்ல ஆரோக்கியத்துடன்
வாழ வாழ்த்தி ஜெபிக்கும்

ஊழியரின் குடும்பம்




இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
HAPPY
New
Year
2025

Regd.under Newspaper RNI.No. TNTAM/2015/66320 & Posting under
Regd No. VL/031/2022-2024of senior Supdt. of Post Office / VLR
No. J/RNP/Chosen Generation/Dlgs dated at Vellore - 632 001 the 20.09.2021
Posted at HPO/Vellore on 30th or 31st of every month.



## CGA Church Service and Live Streaming Schedules are given below in Indian Timings - IST

Every Day Tamil Msg-Live Streaming - 7 am to 8 am & 7 pm to 8 pm

SUNDAY SERVICE (TAMIL) : Every Sunday - 9am to 11.30 am

One hour Prayer with Pastor : Every Tuesday - 7.00 pm to 8.00 pm

BIBLE STUDY : Every Wednesday - 7.30 pm to 8.30 pm

FASTING & DIVINE HEALING MEETING :

2nd Saturday of the Month - 10.00 am to 2.30 pm

TARRYING MEETING : 4th Saturday of the Month - 7.30 pm to 8.30 pm

MORNING DEVOTION : 1st Day of the Month - 5.00 am to 6.00 am

Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printed at Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal